செய்தி வெளியீடு எண்.7/2011 நாள்: 6.7.2011

# சென்னை மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை பராமரித்து வைக்க சென்னைக்குடிநீர் வாரியம் வேண்டுகோள்

சென்னை மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை பராமரித்து வைக்க பொது மக்களை சென்னைக் குடிநீர் வாரிய நிர்வாக இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

சென்னை மாநகர் மற்றும் புறநகரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் தங்கள் வீடுகள், அலுவலகங்கள், நிறுவனங்கள், உணவகங்கள், திருமண மண்டபங்கள், திரைப்பட அரங்குகள் மற்றும் இதர இடங்களில் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை ஏற்படுத்தியதன் மூலம் நிலத்தடி நீரின் அளவும், அதன் தரமும் பருவ மழை காலங்களில் உயர்ந்து வருகிறது.

சென்னைக் குடிநீர் வாரியம், தேர்ந்தெடுக்கப்பட்ட 50 கண்காணிப்பு கிணறுகளில், நிலத்தடி நீரின் அளவு மற்றும் நீரின் தரத்தைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. இதன் மூலம் நிலத்தடி நீரின் அளவும், தரமும் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதன் பயனைத் தொடர்ந்து பெற, பொதுமக்கள் தங்கள் வீடுகள் மற்றும் மேற்குறிப்பிட்ட இதர இடங்களில் உள்ள மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை, பருவமழை தொடங்குவதற்கு முன்பாக அவைகளை நன்கு பராமரித்து அல்லது பழுது பார்த்து வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தங்கள் வீடுகளிலுள்ள வடிகட்டும் தொட்டிகளில் நிரப்பியுள்ள மணல், கூழாங்கல், கருங்கல் ஆகியவற்றை வெளியே எடுத்து, அதை நீரால் சுத்தம் செய்து மீண்டும் அத்தொட்டியில் நிரப்ப வேண்டும். மேலும் கட்டடங்களில் உள்ள மழைநீர்க் குழாய்களில் ஏதேனும் ஓட்டை, விரிசல் அல்லது அடைப்புகள் இருந்தால் அவற்றைச் சரி செய்து மழைநீர் முழுவதும் வீணாகாமல் பூமிக்குள் செல்வதை உறுதி செய்ய வேண்டும்.

மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளைப் பராமரிப்பதில், வீடுகளில் வசிப்பவர்களுக்கும் மற்றும் இதர இடங்களில் உள்ளவர்களுக்கும் ஏதேனும் விவரம் தேவைப்படின், சம்பந்தப்பட்ட சென்னைக்குடிநீர் வாரிய பகுதி மற்றும் பிரிவு அலுவலகங்களை அணுகி ஆலோசனை பெறலாம்.

சென்னைக் குடிநீர் வாரியத்தின் அலுவலர்களும், பொதுமக்களின் வீடுகள், கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை ஆய்வு செய்து தக்க ஆலோசனைகளை வழங்குவார்கள். நிலத்தடி நீர் மட்டம் உயர்வதுடன் அதன் தரமும் மேம்பாடு அடைந்து, கோடை காலங்களிலும் நீர் பற்றாக்குறை ஏற்படாமல் பயன் பெற பொதுமக்கள் தங்கள் வீடுகளிலுள்ள மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை நன்கு பராமரிக்குமாறு சென்னைக் குடிநீர் வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது.

மேலும் இது குறித்த விவரங்கள் அறிய தலைமை அலுவலகத்திலுள்ள மழைநீர் சேகரிப்புப் பிரிவின் தொலைபேசி : **28454080** அல்லது www.chennaimetrowater.tn.nic.in என்ற இணையதள முகவரியைத் தொடர்பு கொள்ள பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மக்கள் தொடர்பு மேலாளர்